P. Dilipraj 17 BPE 06

Basket Ball

Special Quota if any	

பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்:-
ந.க.எண் : அ4/300/04/2020.

தமிழ்நாடு சிறப்புக்காவல் 14ஆம் அணி, பழனி.

நாள்:-29.04.2020.

தற்காலிக பணிநியமன ஆணை

பொருள் :- காவல்- 2019ம் ஆண்டு இரண்டாம்நிலை காவலர்களாக(ஆண்கள்) த.சி.கா படையில் பணிநியமனம் செய்தல்- தற்காலிக பணி நியமன ஆணை - வழங்கப்படுகிறது.

திரு DILIP RAJ P த.பெ PAVUNRAJ ஆகிய நீவிர், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட 2019ம் ஆண்டுக்கான காவலர் தேர்வு மற்றும் காவல் விசாரணை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்டு, த.சி.கா படையில் இரண்டாம்நிலை ஆண் காவலராக தற்காலிகமாக பணியமர்த்தப்படுகிறீர்.

2. நீவிர், மேற்படி பதவிக்குரிய அடிப்படை பயிற்சிக்கு அறிக்கை செய்யும் போது கல்வி, வயது, ஜாதி ஆகியவற்றின் மூல சான்றிதழ்கள் மற்றும் இதர சான்றிதழ்கள் ஆகியவற்றை முன்னர் நீவிர் அளித்துள்ள நிழற்பட நகல்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்க சம்மந்தப்பட்ட பணிநியமன அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் பணி நியமனத்திற்காக நீவிர் ஏற்கனவே சமர்ப்பித்த விவரங்கள் தவறானவை எனத்தெரிய வந்தாலோ அல்லது குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டிருந்தாலோ, குற்ற வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்களை மறைத்து காவல் விசாரணை அறிக்கையை பூர்த்தி செய்து, அது பின்னர் கண்டறியப்பட்டாலோ, இந்த நியமன ஆணை உடனடியாக ரத்து செய்யப்படும் என்பதை அறியவும், காவல் பயிற்சியின்போது உமக்கு ரூபாய்.18200-57900 என்ற சம்பள விகிதத்தில் சம்பளமும், மற்றும் நடைமுறையில் உள்ள இதர படிகளும் வழங்கப்படும்.

3.இந்தப் பதவியில் நீவிர் இரண்டு ஆண்டு காலத்தொடர் பணியில், ஒரு வருட காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவீர். இந்த தகுதி காண் பருவத்தில உமது பணி திருப்திகரமாக இல்லையெனில், பதவி நீக்கம் செய்யப்படுவீர்.

4.அரசு ஆணை பல்வகை எண்.206 உள்(கா.3) துறை, நாள் 07.03.2012-ன் படி நீவிர் பயிற்சி பள்ளியில் உறைவிடப்பயிற்சியும் மற்றும் நடைமுறை பயிற்சியும், எட்டு மாதம் காலம் அடிப்படை பயிற்சிப்பெற வேண்டும். இவை தவிர சிறப்புக்காவல்/சேமப்படை ஆகியப்பிரிவுகளில் பணியாற்றிய தாலுகா காவல்பிரிவு மாற்றலுக்கு முன் ஒரு மாத கால அறிமுகப்பயிற்சி(Pre-Induction Course) காவல் பயிற்சிப் பள்ளியில் பெறவேண்டும். பயிற்சிக்காலத்தில் உமது நடத்தை, நல்லொழுக்கம் மற்றும் பயிற்சியை மேற்கொள்ளும் திறன் ஆகியவைகள் மீது ஏதேனும் கவனமின்மை, பற்றாக்குறை தென்படின் பதவி நீக்கம் செய்யப்படுவீர். ஆனால் தற்போது நிலவும் எதிர்பாராத கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக பொது மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்ய நீங்கள் நேரடியாக, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிநியமன அதிகாரியிடம் பணிக்கு அறிக்கை செய்ய அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

5. மேலும், நீவிர் காவல் பணி நியித்கும் காரணமாக தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திலும், காவல் துறையின் எந்த அணியிலும் தேவை ஏற்படின் பிற மாநிலங்களிலும், பணி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளீர் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான இசைவு கடிதம் பயிற்சியில் சேர்ந்த உடன் உம்மால் பூர்த்தி செய்து பணிநியமன அதிகாரியிடம் கொடுக்கப்பட வேண்டும்.

6. உமக்கு அடிப்படை பயிற்சி 03.05.2020 அன்று முற்பகல் முதல் தொடங்கப்பட வுள்ளது. எனவே இது தொடர்பாக சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் காவல் நடைமுறைகளுக்காக நீவிர், **03.05.2020 அன்று முற்பகல் த.சி.கா 14-ஆம், அணி, பழனியில்** ஆஜராக வேண்டும். பயிற்சிக்குரிய சீருடைகள் உமக்கு வழங்கப்படும். குறிப்பிட்ட தேதியில் நீவிர் பயிற்சிக்கு ஆஜராகாவிடில், உமது தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை அறியவும், நீவிர் அரசு/பொதுத்துறை/தனியார் நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தால், அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான ஆணை அல்லது பணிவிலகல் ஏற்பு ஆணையினைப் பயிற்சிக்கு ஆஜராகும் போது அளிக்க வேண்டும்.

7. நீவிர், பயிற்சிக்கு ஆஜராகும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள பொருட்கள் மற்றும் முன்பணத்தொகை ஆகியவைகளை உடன் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்படுகிறீர். பயிற்சியில் சேருவதற்காக பயணப்படி மற்றும் தினப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.

8. நீவிர் அல்லது தங்கள் குடும்பத்து உறுப்பினர் எவரேனும் கொரானா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு இருந்தாலோ அல்லது 02.05.2020 அன்று அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு மண்டலத்தில் வசித்து கொண்டு இருந்தாலோ அல்லது கொரானா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என கருதப்பட்டு அதன் தொடர்பாக பரிசோதனை முடிவுகள் எதிர்பார்த்திருந்தாலோ, இது குறித்து நோய் தொற்று எதும் இல்லை என்ற மருத்துவசான்று அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசு மருத்துவரிடமிருந்து பெற்று சமர்ப்பித்த பின்பு தான், தாங்கள் பயிற்சிக்கு அறிக்கை செய்ய அனுமதிக்கப்படுவீர் என தெரிவிக்கப்படுகிறது.

9. இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் சம்பந்தப்பட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை அணுகியோ அல்லது தொலைபேசி எண் 94981-01520 மூலமாக அல்லது காவல்துறை உதவி தலைவர் (பணியமைப்பு) சென்னை அவர்களின் தொலைபேசி எண் 9487871001-ல் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு:- பயிற்சியில் சேரும் போது கொண்டு வரவேண்டியவற்றின் விவரப்பட்டியல்.

தளவாய்,
த.சி.கா 14 ஆம் அணி,
பழனி.

பெறுநர்:-

2417375
DILIP RAJ P
S/O.PAVUNRAJ
222/3,KALLAR STREET,
MATTAPARAI,
RAMARAJAPURAM POST,